மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | குரல்: 140 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 22.01.2024 | பக்கங்கள் 10



# தமிழரசின் புதிய தலைவரானார் சிறிதரன் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு!

பக்கம்–03



## தமிழரசுக் கட்சியை கூட்டமைப்பில் மீண்டும் புதிய தலைவர் இணைக்க வேண்டும்!

வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

பக்கம்–07

## இந்த பயணத்திலே நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப்போம்!

பா.உ. எம்.ஏ.சுமந்திரன்



பக்கம்–06


## தமிழ் தேசியத்தின் ஒற்றுமை:

சிறீதரனிடம் சித்தார்த்தன் முன்வைத்த கோரிக்கை!



பக்கம்–06

# தமிழ் தேசியத்திற்கான பயணம் தொடரும்: தமிழரசு கட்சியின் புதிய தலைவர் உறுதியளிப்பு!



எமது பொதுச்சபை உறுப்பினர்களின் அயராத உழைப்பு, புலம்பெயர் நாடுகளிலும், உள்நாடுகளிலும் இருக்கின்ற தமிழர்களுடைய மன எண்ணங்கள், தீர்மானங்கள் அனைத்துமே வழங்கிய இந்த சந்தர்ப்பத்தை நானும் ஏனையோரும் இணைந்து ஒற்றுமையாக முன்னெடுத்துச் செல்வோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறைவன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றிகள்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக நான் தெரிவாவதற்கு காரணமாக இருந்த இறைவன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். ஜனநாயக ரீதியான கலந்துரையாடல் மற்றும் செயற்பாடுகள் ஊடாக வரலாற்று ரீதியான அத்தியாயத்தைப் படைத்திருக்கின்றோம். இது பலபேருக்கு பல நம்பிக்கைகளைத் தந்திருக்கின்றது.பல இளைஞர் யுவதிகளிடையே கட்சி பற்றிய அதீத அக்கறையைக் கொள்ள வைத்திருக்கின்றது.

இன்று என்னுடன் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட எனது நண்பர்களான சுமந்திரன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் நாங்கள் இணைந்து எமது கட்சியின் செயற்பாட்டை எமது மக்களின் உரிமைக்காக தேசிய இருப்புக்காகவும், தமிழ்த்தேசியத்தினுடைய ஒவ்வொரு அங்குல இருப்புக்காகவும் பொறுப்போடும் கடமையோடும் முன்னெடுப்போம்.

எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது. தமிழ்த் தேசியத்தின் இருப்பு சார்ந்தது

நாங்கள் ஏற்கனவே எங்களுடைய பலத்தையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தியிருத்தோம். எங்களுடைய பங்கு என்பது இனம் சார்ந்தது. தமிழ்த் தேசியத்தின் இருப்பு சார்ந்தது, எமது இருப்பின் அடிப்படை உரிமை சார்ந்தது. அந்த உரிமையைப் பலப்படுத்துவதற்காக நாங்கள் எங்களது கரங்களை ஒன்றாகப் பலப்படுத்துவோம்.

எமது பொதுச்சபை உறுப்பினர்களின் அயராத உழைப்பு, புலம்பெயர் நாடுகளிலும், உள்நாடுகளிலும் இருக்கின்ற தமிழர்களுடைய மன எண்ணங்கள், தீர்மானங்கள் அனைத்துமே எங்களுக்கான ஒரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கின்றது.

அந்த சந்தர்ப்பத்தை நானும் ஏனையோரும் இணைந்து முன்னெடுத்துச் செல்வோம். அதற்கான இந்த வாய்ப்பிற்காக அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.



# தமிழரசு கட்சியின் புதிய தலைவருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வாழ்த்து!



தமிழரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

உங்களுடைய சேவைக் காலத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதோடு, வடக்கு கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் மென்மேலும் வளர்ச்சி அடைய தங்களின் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

# இந்திய உயர்ஸ்தானிகருக்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையே கலந்துரையாடல்!

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பானது கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் நடைபெற்றது. அபிவிருத்தி திட்டங்கள் இதன்போது வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆளுநரால் இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி புரியும் என தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர் விசேடமாக வடக்கு மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வித்தியா கொலை வழக்கு
## குற்றவாளிகளின் மேன்முறையீடுகள் விசாரணை!



யாழ்ப்பாணம் - புங்குடுதீவு சிவலோகநாதன் வித்தியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் கடந்த 09 ஆம் திகதி அழைக்கப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து, மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நாளை எடுத்துக்கொள்வதற்கு நீதியரசர்கள் குழு உத்தரவிட்டது.

இதற்கமைய, வித்தியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகள் நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - புங்குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவி கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் 7 எதிரிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேருக்கு 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மரண தண்டனை விதித்தது.

தமக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள விதம் சட்டத்துக்கு முரணானது என குறித்த பிரதிவாதிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, குற்றச்சாட்டில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதிகள் உயர் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசியம் பத்திரிகையின்
மின்னிதழைப் பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME



# எமது சமூக மாற்றம் என்பதும் கல்வியிலேயே தங்கியுள்ளது!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்!





கல்வியே எம்மை எப்போதும் காக்கும், எமது சமூக மாற்றம் என்பதும் கல்வியிலேயே தங்கியுள்ளது, எனவே, பிள்ளைகளை தயவுசெய்து பாடசாலைக்கு அனுப்புங்கள், பொருளாதார நெருக்கடி என்பதால் கல்வியை கைவிட்டால் எமக்கு விடிவு பிறக்காது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டன்பார் மைதானத்தில் நேற்று (21.01.2024) நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். மலையகத்தின் முன்னேற்றம் இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“ இன்றைய நாள் மிகவும் சந்தோசமான நாளாகும், தேசிய தைப்பொங்கல் விழாவை எமது மலையக மண்ணில் வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு இரவு, பகல் பாராது கடுமையாக உழைத்த எமது அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர் உட்பட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், எமது அழைப்பையேற்று மலையகத்துக்கு வருகை தந்து எமது மக்களை மகிழ்வித்த தென்னிந்திய நடிகைகளான ஐஸ்வர்யா ராஜேஸ், சம்யுக்தா, மீனாக்சி, ஐஸ்வர்யா டட்டா ஆகியோருக்கும் மக்கள் சார்பில் நன்றிகள்.

அதேபோல பெருமளவான இளைஞர்கள் வந்துள்ளனர், மக்களும் குவிந்துள்ளனர், அவர்களுக்கும் அன்புகலந்த நன்றிகளை கூறுகின்றேன்.

எதை செய்தாலும் விமர்சிக்கும் சிலர், வழமை போல இந்த பொங்கல் விழாவையும் விமர்சிக்கின்றனர், பொங்கல்தான் முடிந்துவிட்டதே, எதற்கு தற்போது பொங்கல் எனவும் கேட்கின்றனர், தூங்குபவர்களை எழுப்பலாம், ஆனால் தூங்குபவர் போல் நடிப்பவர்களை எழுப்பமுடியாது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள், ஆம், காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

அதற்காக 4 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 10 ஆயிரம் வீட்டு திட்டத்தை சிலர் அரசியல் ரீதியாக விமர்சிக்கின்றனர், என்னை பொறுத்தவரை 10 ஆயிரம் வீடுகளைவிட ஒரு லட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கான காணி உரிமையே பிரதான இலக்கு, அதனை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது.

மலையக பல்கலைக்கழகம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழியும் நிச்சயம் நிறைவேற்றப்படும். சம்பளப் பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு கிட்டும். அதேவேளை, இங்குவருகைதந்துள்ள பெற்றோர்களிடமும் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றேன்.

கடும் கஷ்டம் வந்தாலும் பிள்ளைகளின் கல்வியை நிறுத்தவிட வேண்டாம், அவர்களை படிக்கவையுங்கள், தீர்வை தேடுகின்றோம், அந்த தீர்வு கல்வியில் தங்கியுள்ளது என்பதை புரிந்துகொள்ளுங்கள். அது புரியாவிட்டால் விடிவு இல்லை” என தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அமைச்சுகளின் செயலாளர்கள், நுவரெலியா மாவட்ட அரச அதிபர், அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.



# தமிழரசின் புதிய தலைவரானார் சிறிதரன் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு!



இலங்கத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் 47 மேலதிக வாக்குகளால் நேற்றைய தினம் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தேர்வு செய்யும் பொதுச்சபைக் கூட்டம் நேற்று தமிழர் தலைநகர் திருகோணமலையில் இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளுராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் முதற்தடவையாக தலைவர் தேர்வு மூவருக்கிடையிலான போட்டியாக அமைவதால் இன்றைய கூட்டம் முக்கியம் வாய்ந்ததாக தமிழ் அரசியற் தரப்பில் அனைவர் மத்தியிலும் பார்க்கப்பட்டது.

அந்த அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கட்சியின் தலைவர் பதவிக்காக போட்டியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து தலைவர் தெரிவிற்கான வாக்களிப்பினை நடத்துவதற்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, இரகசிய வாக்களிப்பு இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனு 184 வாக்குகளும், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு 137 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. அந்த அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக சி.சிறிதரன் 47 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் தலைவர் ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறீதரனுக்கே வாக்களித்தேன்: யோகேஸ்வரன் பகிரங்கம்!

தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான சீ. யோகேஸ்வரன் எனக்கு நானே வாக்களிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் தனது வாக்கை சி. சிறீதரனுக்கே அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவில் தேசியம் வென்றுள்ளது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் கட்சியினை சிறந்த பாதைக்கு கொண்டு செல்வதோடு கட்சியை கட்டியெழுப்ப வேண்டும்.

மேலும், இவ்வளவு காலமும் போட்டியில்லாத தலைமைத்துவம் தெரிவு செய்யப்பட்டுவந்தது. ஆனால் தற்போது இளைஞர்கள் மத்தியில் கூடிய ஆர்வம் வந்துள்ளது." என்றார்.





# தமிழ் தேசியத்தின் ஒற்றுமை:
## சிறீதரனிடம் சித்தார்த்தன் முன்வைத்த கோரிக்கை!



தமிழ்த் தேசியத்தின் பலத்தை எதிர்காலத்திற்கு கொண்டு செல்ல இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் வழிவகுக்க வேண்டும் என நாடாளு மன்ற உறுப்பினர் சித்தார்த்தன் வலியுறுத்தியுள் ளார். தமிழரசு கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்கும் ஊடக சந்திப்பின் போதே, அவர் இதனை கூறியுள்ளார்.

அத்துடன், தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு மகிழ்வளித்தலும், அதற்கு முற்பட்ட காலத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தமிழ் தலைமைகள் இடையே மனக்கசப்புக்களை ஏற் படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பின்னணியில், இவ்வாறான கருத்து வேறு பாடுகளை தவிர்த்து, தமிழ் தேசியத்தின் ஒற்றுமை யை முன்னிலைப்படுத்த புதிய தலைவர் அனைத்து கட்சிகளுடனும் இணக்கமாக செயற்பட வேண்டும் எனவும் சித்தார்த்தன் கோரியுள்ளார்.

# இந்த பயணத்திலே நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப்போம்!

## பா.உ. எம்.ஏ.சுமந்திரன்



தமிழரசுக் கட்சி உட்கட்சி ஜனநாயகத்தை நாட் டிற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தியிருக் கின்றது. புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நண்பன் சிறிதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்து களைத் தெரிவிப்பதுடன், இந்த பயணத்திலே நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப் போம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசு தலைவர் பதவிக்கு போட்டியிட்டவருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திருகோணமலையில் இடம் பெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவில் தோல்வியுற்றதன் பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய தினம் எமது தமிழரசுக் கட்சி உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் முன்மாதிரியாக நிகழ்த்திக் காட்டி இருக்கின்றது. இதிலே வெற்றி பெற்ற சக வேட்பாளர் எனது நண் பன் சிறிதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக ளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களது முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் இத்தனை காலமும் வழிநடத்திய தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு தற்போது நண்பன் சிறிதரனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மிகவும் சந்தோசமான விடயம். இந்த பயணத்திலே நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப் போம். இது நாங்கள் இருவரும் தேர்தல் காலத்திலே யே மக்களுக்குத் தெளிவாக சொல்லி வந்த விடயம் அப்படியாகவே தொடர்ந்து பயணிப்போம்.

எனது முழுமையான ஆதரவை தற்போது ஜனநாயக முறையிலே தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற தலைவ ருக்கு முழுமையாக வழங்குவேன் என்பதையும் இந்த வேளையிலே அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.






# கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய தமிழரசு கட்சியின் புதிய தலைவர்!



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன், கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

மேலும், கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயத்தின் முன்பாக அவருக்கு வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தற்போது கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.





# தமிழரசுக் கட்சியை கூட்டமைப்பில் மீண்டும் புதிய தலைவர் இணைக்க வேண்டும்!

## வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதாக கட்சி அறிவித்துள்ளது எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்

கடந்த உள்ளூராட்சி வேட்புமனு தாக்கலுக்கு முன்பாக கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியது ஆனால் கட்சியின் அன்றைய முடிவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தி இனத்தின் ஒற்றுமை கருதி பொதுச் சின்னத்தில் கூட்டமைப்பாக கடந்த காலத்தில் சில கசப்பான சம்பவங்களால் வெளியேறிய அனைவரையும் ஒன்றினைத்து ஒரு குடையின் கீழ் பயனிக்க தீர்க்க முடிவை கட்சியில் ஏகமனதாக எடுங்கள்.

தலைவர் தெரிவுக்கு முன்பாக மக்களுக்கும் கட்சித் தொண்டர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் முக்கியமானவை அதன் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மீண்டும் இணைந்து பொதுச் சின்னத்தில் இனத்தின் ஒற்றுமையையும் அரசியல் விடுதலையையும் வென்றெடுப்போம்.



# பிரம்மாண்டமாக காட்சியளிக்கும் அயோத்தி ராமர் கோவில!

## இஸ்ரோ வெளியிட்டுள்ள படங்கள்!



விண்வெளியில் இருந்து செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட அயோத்தி ராமர் கோவிலின் புகைப் படங்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவன மான இஸ்ரோ(ISRO)வெளியிட்டுள்ளது.

அயோத்தி ராமர் கோவிலின் திறப்பு விழா இன்று (22) இடம்பெறவுள்ள நிலையில் இந்த புகைப்படங் கள் வெளியாகியுள்ளன.

ஐதராபாத்தை தளமாகக் கொண்ட இஸ்ரோவின் National Remote Sensing Centre (NRSC) இந்த படங்களை வெளியிட்டுள்ளது.

இந்த படங்களில், 2.7 ஏக்கரில் கட்டப்பட்டுள்ள ராம ஜென்மபூமி தளமும் கோயிலைத் தவிர, சரயு நதி, தஷ்ரத் மஹால் மற்றும் அயோத்தி தொடருந்து நிலையம் ஆகியவை படங்களில் தெளிவாகத் தெரிகின்றன. இந்த படங்கள் 2023 டிசம்பர்16 ஆம் திகதி எடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

ராமர் கோவில் கட்டும் பணியில் இஸ்ரோவிடமி ருந்து தொழில்நுட்ப உதவியும் எடுக்கப்பட்டுள்ளதாக விஷ்வ ஹிந்து பரிஷத்தின் சர்வதேச செயல் தலைவர் அலோக் சர்மா தெரிவித்துள்ளார்.

ராமர் கோவில் கட்டும் போது ராமர் பிறந்ததாக நம்பப்படும் இடத்தில் ராமர் சிலை வைப்பது மிகப்பாரிய சவாலாக இருந்ததுள்ள நிலையில் இதற்கு இஸ்ரோ உதவி அளித்துள்ளது.

ராமர் கோயிலைக் கட்டும் கட்டுமான நிறுவனமான லார்சன் ஏரு டூப்ரோவின் (Larsen & Toubro) ஒப்பந்ததாரர்கள் உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பை (GPS) பயன்படுத்தினர். சுமார் 1-3 செமீ வரையிலான துல்லியமான ஒருங்கிணைப்புகள் தயாரிக்கப்பட்டன.

இது கோயிலின் கருவறை மற்றும் சிலை நிறுவப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

இந்த புவியியல் கருவியில் பயன்படுத்தப்படும் உபகரணங்களில், இஸ்ரோவால் உருவாக்கப்பட்ட Navigation with Indian Constellation (NavIC) செயற்கைக்கோளில் இருந்து location signals அடங்கும்.

பாரம்பரிய நாகரா பாணியில் கட்டப்பட்ட கோயில் வளாகம், 380 அடி நீளம் (கிழக்கு-மேற்கு திசை), 250 அடி அகலம் மற்றும் 161 அடி உயரம் கொண்டது. கோவிலின் ஒவ்வொரு தளமும் 20 அடி உயரம் மற்றும் மொத்தம் 392 தூண்கள் மற்றும் 44 வாயில்கள் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்!

## உயிரிழந்தவர்களை புனிதர்களாக அறிவிக்க நடவடிக்கை!



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களை புனிதர்களாக அறிவிக்க உள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கந்தானை புனித செபஸ்டியன் தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையின் போது உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை நாடு கொண்டாடும் போது இதற்கான முதல் படி எடுக்கப்படும்.

கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி தேவாலயங்களில் இறந்தவர்கள் கடவுளை நம்பியதற்காக தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தனர்.

அன்று அவர்கள் கிறிஸ்துவை நம்பியதால் தேவாலயத்திற்கு வந்தனர். மற்ற புனிதர்களைப் போல கிறிஸ்துவை நேசித்ததால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்தனர்.

ஒருவர் தியாகம் செய்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரே அவரை புனிதர் என்று பெயரிட முடியும். எனவே, உயிர்த்த ஞாயிறு பாதிக்கப் பட்டவர்களை இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி புனிதர்களாக அறிவிப்பதை நோக்கி நகர்வோம்.
கிறிஸ்தவம் என்பது தேவாலயங்களில் மத வழிபாடுகளில் ஈடுபடுவது மட்டுமல்ல. நாம் நீதிக்காக நிற்க வேண்டும்.

மற்றவர்களின் நீதிக்காக நாம் பேச வேண்டும். இதைத்தான் திருத்தந்தை பிரான்சிஸ் திருச்சபை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று தனது திருமறையில் நமக்குக் கற்பித்துள்ளார் என தெரிவித்துள்ளார்.






அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:
CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME